**செ. கு. எண்: 231** **நாள் : 29.12.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களின்
அறிக்கை – 29.12.2014

2006 முதல் 2011 வரை மைனாரிட்டி அரசுக்கு தலைமை தாங்கி ஆட்சி நடத்தி போக்குவரத்து துறையை சீரழித்து விட்டுச் சென்ற திரு.மு.கருணாநிதி இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்களில் மைனாரிட்டி நிலையில் உள்ள திமுகவைச் சார்ந்த தொழிற்சங்கமான தொ.மு.ச.வுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற ரீதியில் அறிக்கை ஒன்றினை 28.12.2014 அன்று வெளியிட்டுள்ளார். வெறும் 13.96 சதவீத உறுப்பினர்களைக் கொண்டுள்ள தொ.மு.ச-வைச் சார்ந்தப் பணியாளர்களை தூண்டிவிட்டு சட்டவிரோதமான வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள வைத்த திரு.கருணாநிதி தனது அறிக்கையில் இந்த அரசை குறை கூறி கண்டித்துள்ளார். தி.மு.க.வைச் சார்ந்த தொ.மு.ச.வினர் சட்ட விரோதமாக வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளதை மறைக்கும் விதமாகவே இது போன்ற ஒரு அறிக்கையை திரு.கருணாநிதி வெளியிட்டுள்ளார்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக 2011 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றபோது அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டுமொத்த இழப்பு 6,150 கோடியே 95 லட்சம் ரூபாயாகும். பணியிலிருந்து ஓய்வு பெற்ற போக்குவரத்து தொழிலாளர்களுக்கான ஓய்வூதியப் பலன்கள் நிலுவையில் வைக்கப்பட்டிருந்தன. பல பேருந்துகள் இயக்க இயலாத நிலையில் இருந்தன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் முடக்கப்பட்டு தனியார் வயப்படுத்தும் ஒரு தந்திரமான செயலைத் தான் முந்தைய மைனாரிட்டி திமுக அரசு செய்தது.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தான், முந்தைய மைனாரிட்டி திமுக அரசு வழங்காமல் விட்டுச் சென்ற ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை, பணிக் கொடை மற்றும் விடுப்பு ஒப்படைப்புத் தொகை மற்றும் வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றை வழங்கினார்கள். இந்த வகையில் முந்தைய மைனாரிட்டி திமுக அரசால் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த 922 கோடியே 24 லட்சம் ரூபாய் வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான். போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான சொத்துகள் அனைத்தும் வங்கிகளில் அடமானமாக வைக்கப்பட்டிருந்தன. 194 பேருந்துகள் விபத்து இழப்பீடு வழங்காத காரணத்தால் நீதிமன்றங்களால் ஜப்தி செய்யப்பட்டிருந்தன. திமுகவால் தாங்கிப் பிடிக்கப்பட்ட முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மாதாமாதம் டீசல் விலையை உயர்த்துவதையே ஒரு கொள்கையாக கொண்டிருந்தபோதும் அது குறித்து வாய் மூடி மவுனியாக இருந்தவர் திரு.கருணாநிதி. ஆனால், டீசல் விலை உயர்வு காரணமாக போக்குவரத்துக் கழகங்கள் நொடிந்து விடாமல் காப்பாற்றப்பட 1,298 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான். இவ்வாறு போக்குவரத்து தொழிலாளர்களை வஞ்சித்த திரு.கருணாநிதி தனது அரசு வழங்கிய சலுகைகளைப் பற்றி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். “அரைப்படி அரிசி அன்னதானம்; விடியும் வரை மேளதாளம்” என்னும் சொலவடையைத்தான் இது நினைவுபடுத்துகிறது.

போக்குவரத்து பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி, பதவி உயர்வு ஆகியவை காலத்தே வழங்கப்பட்டுள்ளன. 16661 ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 9157 பதிலி பணியாளர்களின் பணி வரண்முறை செய்யப்பட்டுள்ளது. 45 வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு ஆண்டுதோறும் கட்டணம் ஏதுமில்லாமல் முழு உடற் பரிசோதனை செய்யும் வசதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இறந்து போன பணியாளர்களின் 338 வாரிசுகள் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திரு.கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தன்னை அறியாமலேயே போக்குவரத்து தொழிலாளர்களுக்கு முதன் முதலில் ஒப்பந்தம் மூலம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சி காலத்தில் தான் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். போக்குவரத்து தொழிலாளர்களுக்கு காலமுறை ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்தி ஊதிய உயர்வு வழங்கப்படும் நடைமுறையை ஏற்படுத்தியது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமையிலான அஇஅதிமுக அரசு தான். அதையே இன்று வரை நாங்கள் கடைபிடித்து வருகிறோம்.

போக்குவரத்து ஊழியர்களுடனான ஊதிய பேச்சுவார்த்தை தொடர்பாக எந்த தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது பற்றிய வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 1.1.2015 முதல் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக மாதமொன்றுக்கு 1,000 ரூபாய் வழங்கப்படும் என்றும், ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்பிற்கு பிறகு, ஊதிய ஒப்பந்தம் உரியவாறு மேற்கொள்ளப்படும் என்பதையும் 8.12.2014 அன்று நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே அறிவித்தேன். இவ்வாறு இடைக்கால நிவாரணம் அறிவித்த பின்னரும், மைனாரிட்டி எண்ணிக்கையில் உறுப்பினர்களை கொண்ட தொ.மு.ச. வுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும் என்பதற்காகவே திமுகவைச் சார்ந்த தொழிற்சங்கத்தில் இணைந்துள்ள அப்பாவித் தொழிலாளர்களை போராட்டத்திலும் வன்முறையிலும் ஈடுபடத் தூண்டி விட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பது எந்த விதத்தில் நியாயம் என்பதை திரு.கருணாநிதி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கு பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்காது என்ற ஒரு பொய்யான விளக்கத்தைக் கொடுத்து தொழிலாளர்களையும், பொதுமக்களையும் ஏமாற்ற நினைக்கிறார் திரு.கருணாநிதி. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர் சம்மேளனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் அப்பீல் எண்.1425/2006-ன் மீது டிவிசன் பெஞ்ச் 21.9.2010 மற்றும் 1.10.2010 தேதிகளில் அளித்த தீர்ப்பில், தொழிலாளர்களிடையே தொழிற்சங்கப் பிரதிநிதித்துவம் (Representative Character Union) அறிய இந்திய உணவுக் கழகத்தில் உள்ள நடைமுறைப்படி தேர்தல் நடத்தி, அதிக வாக்குகள் பெறும் பிரதான தொழிற்சங்கத்தை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தலாம் என உத்தரவிட்டுள்ளது. இத்தீர்ப்பினை எதிர்த்து அண்ணா தொழிற்சங்கப் பேரவை உச்சநீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு SLP C.C.No.16146/2010 தாக்கல் செய்தது. உச்சநீதிமன்றம் தனது இடைக்காலத் தீர்ப்பில், சென்னை உயர்நீதிமன்ற டிவிசன் பெஞ்ச் அளித்த தீர்ப்பின்படி தேர்தல் நடத்தி அதிக வாக்குகள் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தலாம்

என்றும், பேச்சுவார்த்தையின் மூலம் எடுக்கப்பட்ட முடிவுகள் இவ்வழக்கின் இறுதித் தீர்ப்புக்கு கட்டுப்பட்டதாகும் என தெரிவித்தது.

உச்சநீதிமன்ற ஆணைக்கிணங்க, உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் திரு.அப்துல் உறாதி அவர்களின் மேற்பார்வையில், **25.11.2010** அன்று நடைபெற்ற தேர்தலில் **73,450** வாக்குகளை அதாவது **57.31** சதவீத வாக்குகளை தொ.மு.ச. பேரவை பெற்றது. அதனைத் தொடர்ந்து முந்தைய திமுக அரசின் அரசாணையின்படி **8.12.2010** தேதியிட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைக்கு (LPF) தமிழக போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் சம்பந்தமாக அனைத்து விஷயங்களுக்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள **5** ஆண்டுகளுக்கு அங்கீகாரம் (Sole bargaining agent) வழங்கப்பட்டது. மேலும், இந்த அங்கீகாரம், சிறப்பு விடுப்பு மனுவின் மேல் மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு உட்பட்டது என தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் **22.1.2011** அன்று தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையுடன் பேச்சுவார்த்தை நடத்தி **1.9.2010** முதல் புதிய ஊதிய ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர் சம்மேளனம் (TTSF), அண்ணா தொழிற்சங்கப் பேரவை (ATP), மாநகர் போக்குவரத்துக் கழகம் - சென்னை மற்றும் தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில் (SLP 31574/2010) அண்ணா தொழிற்சங்கப் பேரவையில் (ATP) ஜுலை **2011** நிலவரப்படி **70,386** உறுப்பினர்களும், தொ.மு.ச. பேரவையில் **34,944** உறுப்பினர்களும் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. மேலும், தற்பொழுது **30.11.2014** நிலவரப்படி அண்ணா தொழிற்சங்கப் பேரவையில் **91,440 (70.90%)** உறுப்பினர்கள் உள்ளனர். தொ.மு.ச. பேரவைக்கு **18,000 (13.96%)** உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். சென்னை உயர்நீதிமன்ற டிவிசன் பெஞ்ச் தீர்ப்பின் அடிப்படையில், இன்றைய தேதியில் **91,440** உறுப்பினர்களைக் கொண்ட சங்கமான அண்ணா தொழிற்சங்கப் பேரவையுடன் தான் பேச்சுவார்த்தை நடத்த முடியும். **18,000** உறுப்பினர்கள் மட்டுமே உள்ள தொ.மு.ச. பேரவை பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தகுதியினை இழந்த நிலையில் உள்ளது.

இந்நிலையில், **4.12.2014** அன்று தொ.மு.ச. உள்ளிட்ட **11** சங்கங்கள், **1.9.2013** முதல் புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த கூட்டாக கோரிக்கை மனுவினை அளித்தனர். மேற்படி தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதாக வேலைநிறுத்த அறிவிப்பு அளித்தனர். இதனை தொடர்ந்து, தனித் துணை தொழிலாளர் ஆணையர் (சமரசம்) அவர்கள் முன்பு நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்கள் இடையே, தொழிற்சங்கங்கள் மேற்கொள்ள இருக்கும் வேலைநிறுத்தத்தைக் கைவிடக் கோரி **26.12.2014** மற்றும் **27.12.2014** ஆகிய தேதிகளில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. **26.12.2014** அன்று நடைபெற்ற முதற்கட்ட பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே வாயிற்கூட்டம் என்ற பெயரில் சென்னை பல்லவன் இல்லத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தி தொ.மு.ச.வினர் பேச்சுவார்த்தைக்கு இடையூறு ஏற்படுத்தினர். மேலும் **27.12.2014** அன்று இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையின் போது, தொ.மு.ச. அனைத்து சங்கங்களையும் அழைத்து பேசலாம் என எழுத்துப்பூர்வமாக நீதிமன்றத்தில் தெரிவித்து, நீதிமன்ற உத்தரவு பெற்றால் மட்டுமே, அனைத்து தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இயலும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால், தொ.மு.ச. பேரவை தங்களது நிலையை மாற்றிக் கொள்ள முடியாது என தெரிவித்ததோடு, இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளாமல், தன்னிச்சையாக சில தொழிற்சங்கங்களுடன் கூட்டு சேர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக

தெரிவித்தனர். இதனால், தொழிலாளர் நலன் கருதி அரசு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் தொ.மு.ச. பேரவையைச் சேர்ந்தவர்கள் வீணடித்து போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு **1.9.2013** முதல் ஏற்படுத்த வேண்டிய புதிய ஊதிய ஒப்பந்தத்தினைத் தடுத்ததோடு, **29.12.2014** முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்துவிட்டு, முன்னறிவிப்பு ஏதுமின்றி **28.12.2014** அதிகாலை முதல் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பேருந்து இயக்கங்களைத் தடுத்தும், பணிக்கு வந்த ஒட்டுநர், நடத்துநர்களைத் தாக்கியும், பேருந்துகளுக்கு சேதம் விளைவித்தும் சட்டத்திற்கு புறம்பாக நடந்து கொண்டனர்.

தொ.மு.ச-வைச் சேர்ந்த பணியாளர்களில் திமுகவினரால் தவறாக வழிநடத்தப்பட்டுள்ள சில தொமுச உறுப்பினர்கள் பணிக்கு வராததோடு, வன்முறையிலும் ஈடுபட்டனர். வன்முறையில் ஈடுபடுபவர்கள் தமிழக அரசின் போக்குவரத்துத் துறையையும், பொதுமக்களையும் பிணையமாக்க முடியாது என்பதால் தான் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக இன்று தமிழகத்தில் சுமார் 70 சதவீத பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. நாளை முதல் முழு அளவில் பேருந்துகள் இயக்கப்படும் என்ற நம்பிக்கை தமிழக அரசுக்கு உள்ளது.

மேலே சொன்னவாறு, உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை எவ்வாறு நடத்த இயலும்? போக்குவரத்துக் கழகங்களில் தற்போது மிக அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ள தொழிற்சங்கம், அண்ணா தொழிற்சங்கப் பேரவை தான் என்பதை தொ.மு.ச-வைச் சேர்ந்தவர்கள் உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்றின் மூலமாகத் தாக்கல் செய்தால், உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு முடிக்கப்பட்டு, தொழிற்சங்க நிர்வாகிகளுடன் உடனடியாக பேச்சு வார்த்தை நடத்தப்படுவதற்கு வழிவகை ஏற்படும். போக்குவரத்து தொழிலாளர்களின் நலனில் உண்மையிலேயே திரு.கருணாநிதிக்கு அக்கறை இருக்குமேயானால், இது போன்ற ஒரு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முன்வர வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஓ.பன்னீர்செல்வம்
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**